## கோவை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

## முன்னிலை - திருமதி.ஆர்.செந்தில்குமாரி.,

### சுருக்கம்

பணிக்குழு - தொழிலாளர் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - செல்வி.சு.அங்குலட்சுமி, இளநிலை உதவியாளர், தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம், கோவை - இளநிலை உதவியாளர், பதவியில் 06.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதி காண் பருவத்தில் வைத்து - உத்தரவிடப்படுகிறது.

---

ந.க.எண்.அ/1239/2020-3 நாள்- 04.06.2020.

**படிக்கவும்**

1. அரசாணை எண்.10, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்-14.12.1995.
2. அரசாணை எண்.190, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் - 20.09.2007.
3. தமிழ்நாடு, அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண்.1022/PSD-G2/2019, நாள் - 18.02.2019.
4. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண். ஜி3/44771/2018-1, நாள் - 01.03.2019.
5. கோவை, தொழிலாளர் இணை ஆணையர் கடிதம் எண். அ/1541/2020 நாள். 20.05.2020

------------

**ஆணை-**

மேலே 3 -ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி செல்வி.சு.அங்குலட்சுமி, என்பவர் சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர், பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலே 4-ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணைகளின்படி கோவை, தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு மாநில சார்நிலைப்பணி விதிகளின் பொது விதி 10 (ஏ) (1)-ன்படி பணியமர்த்தப்பட்டு 06.03.2019 அன்று முற்பகல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

மேலே 5-ல் படிக்கப்பட்ட கோவை, தொழிலாளர் இணை ஆணையர் கடிதத்தில், பணிக்காலத்தில் தண்டனைகள் ஏதும் பெறவில்லை எனவும், தனியரது ஓராண்டு பணிக்காலத்தில் மருத்துவ விடுப்பு மற்றும் சம்பளமில்லா விடுப்புகள் ஏதும் துய்க்கவில்லை என்பது பணிப்பதிவேட்டின்படி அறிய வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, மேலே 5ல் படிக்கப்பட்ட கோவை, தொழிலாளர் இணை ஆணையர் கடிதத்தில் பரிந்துரைத்ததின் அடிப்படையில் இவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 06.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்படுகிறது. பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதி காண் பருவத்தில் வைக்கப்படுவதுடன் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Combined Civil Services Examination – IV for the year 2015 – 2016,2016-2017 and 2017-2018 recruitment."

மேலும் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து ஈராண்டு காலத்திற்குள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 34-ன்படி மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்விலும், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

மேற்கண்டவாறு பணிவரன்முறை செய்யப்பட்டதன் விவரம் தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

4/6/2020

கூடுதல் தொழிலாளர் ஆணையர்,
கோவை.

4/6/2020
4/6/2020

பெறுநர்
செல்வி.சு.அங்குலட்சுமி,
இளநிலை உதவியாளர்,
தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம்,
கோவை.
(உரியவழியாக).

<u>நகல்</u>

1. தொழிலாளர் இணை ஆணையர்,கோவை. (பணிப்பதிவேடு (1) கட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெறப்பட்டமைக்கான ஒப்புதலை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கோவை, தொழிலாளர் இணை ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

2. பணிப்பதிவேடு/முக்கிய ஆணைத் தொகுப்பு.

<u>நகல் சமர்ப்பிக்கப்படுகிறது-</u>
தொழிலாளர் ஆணையர், சென்னை-06.